# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 87 | 4 Pages | 29.10.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 87 | 4 பக்கங்கள் | 29.10.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## எகிப்தில் கார்கள் அடுத்தடுத்து மோதி பயங்கர விபத்து: 35 பேர் பரிதாப பலி



கெய்ரோ, அக். 29

எகிப்தில் உள்ள பெஹய்ரா பகுதியில் சென்று கொண்டிருந்த கார்கள் அடுத்தடுத்து மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், இந்த விபத்தில் 50க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்தவர்களை மீட்பதற்காக விபத்து நடந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ்கள் அனுப்பப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எகிப்தில் விபத்துகள் பெரும்பாலும் வேகம், மோசமான சாலைகள் அல்லது போக்குவரத்து சட்டங்களை சரியாக செயல்படுத்தாததால் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

## வீட்டு குவளையில் கிடந்த லாட்டரி சீட்டுக்கு ரூ.8½ கோடி பரிசு




அமெரிக்கா, அக். 29

நம்மில் பலர் ஆசையாக வாங்கியசிலபொருட்களை எங்காவது மறந்து வைத்துவிட்டு பின்னர் அதனைதேடிகண்டுபிடிக்க போராடி இருப்போம். அது போன்ற ஒரு சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. அங்குள்ள மாசசூசெட்ஸ் பகுதியை சேர்ந்தவர் கலீல் சவுசா. இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு லாட்டரி சீட்டு வாங்கினார். அதனை வீட்டில் எங்கோ வைத்துவிட்டார்.

இந்நிலையில் சமீபத்தில் தான் அந்த லாட்டரி டிக்கெட்டுக்கு பரிசு அறிவிப்பு நடந்துள்ளது. இதனால் கலீல் சவுசா அந்த டிக்கெட்டை தேடிய போது வீட்டில் உடனடியாக கிடைக்கவில்லை.

அப்போது தான் அந்த வீட்டின் துப்புரவு பணியாளர் வீட்டை சுத்தம் செய்யும் போது குவளையில் அந்த டிக்கெட் கிடப்பதை பார்த்து அவரிடம் எடுத்து கொடுத்தார். இதனால் கலீல் சவுசா இன்ப அதிர்ச்சி அடைந்தார். அவரிடம் இருந்த டிக்கெட்டுக்கு ஒரு மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் ரூ.8.34 கோடி) பரிசு கிடைத்துள்ளது.

இதில் வரிகள் போக அவருக்கு ரூ.5.50 கோடி கிடைக்கும். இதனால் சந்தோஷத்தில் திளைத்த கலீல் சவுசா லாட்டரியில் கிடைத்த பரிசு தொகையில் ஒரு பகுதியை தேவைப்படும் நண்பர்களுக்கு உதவ விரும்புவதாகவும், தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகள் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

## 22 பேரை கொன்றார்: துப்பாக்கி சூடு நடத்திய ராணுவ வீரர் பிணமாக மீட்பு தற்கொலை செய்து கொண்டதாக தகவல்

லூயிஸ்டன், அக். 29

அமெரிக்காவின் மைனே மாகாணம் லூயிஸ்டன் நகரில் கடந்த 25ந்தேதி ராபர்ட் கார்டு என்பவர் பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினார்.

விளையாட்டு விடுதி, ஓட்டல் உள்ளிட்ட இடங்களில் புகுந்து துப்பாக்கியால்சுட்டதில்22பேர்பலியானார்கள்.50க்கும்மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். முன்னாள் ராணுவ வீரரான ராபர்ட் கார்டு தப்பி ஓடிவிட்டார். அவரைபோலீசார்தீவிரமாகதேடி வந்தனர். அவரது வீட்டை சுற்றி வளைத்து தேடினர். ஆனால் அங்கு அவர் இல்லை. இதையடுத்து லூயிஸ்டன் நகர் முழுவதும் போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ராபர்ட் கார்டிடம் துப்பாக்கி இருப்பதால் பொதுமக்கள் கவனமுடன் இருக்குமாறும், வீட்டுக்குள்ளேயே இருக்கும்படியும் போலீசார் அறிவுறுத்தினர். கடந்த 2 நாட்களாக போலீசார், தேடும் பணியில் ஈடுபட்ட நிலையில் ராபர்ட் கார்டு பிணமாக மீட்கப்பட் டார்.

அவரது உடலில் துப்பாக்கி குண்டு காயம் இருந்தது. ராபர்ட் கார்டு தன்னை தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். லூயிஸ்டனின் தென்கிழக்கே உள்ள லிஸ்பன் நீர்வீழ்ச்சி அருகே மரங்கள் நிறைந்த பகுதியில் ராபர்ட் கார்டு உடல் கண்டெடுக்கப்பட்டது என்று போலீசார் தெரிவித்தனர். இதனால் லூயிஸ்டன் நகரில் 2 நாட்களாக நிலவி வந்த பரபரப்பு முடிவுக்கு வந்தது.

## இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஹமாசின் வான்படை தளபதி கொலை

டெல் அவிவ், அக். 29

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7ம் தேதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.நேற்றைய 21வது நாள் தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேல் ஹமாஸ்இடையிலானபோரில்உயிரிழந்தோர்எண்ணிக்கை8ஆயிரத்தைக் கடந்துள்ளது. இந்நிலையில், காசாவில் ஹமாசின் வான்படை தளபதி இஸ்லாம் அபு ருக்பே கொல்லப்பட்டான் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை மற்றும் உளவு அமைப்பானஷின்பெட் தெரிவித்துள்ளது. ஆளில்லா விமானங்கள், பாராகிளைடர்கள், வான் பாதுகாப்பு அமைப்புகளை ருக்பே நிர்வகித்து வந்தார். இஸ்ரேல் மீது கடந்த 7ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் மூளையாக செயல்பட்டது ருக்பே என விசாரணையில் தெரிய வந்தது. கடந்த 14ம் தேதி ஹமாஸ் விமானப்படையின் முந்தைய தளபதி முராத் அபு முராத் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடம் அருகே ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் மண்டபம்: முதலமைச்சர் தகவல்

சென்னை, அக். 29

பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் முகப்பில் 2 மண்டபங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கதேவர் நினைவிடத்தின் முகப்பில் பொது மக்கள் பாதுகாப்பாக மரியாதை செலுத்தும் வகையில் ரூ.1,42,80,000 மதிப்பீட்டில் ஒரு மண்டபமும், மிக முக்கிய பிரமுகர்கள் மரியாதை செலுத்தும் பாதையில் ரூ.12,54,000 மதிப்பீட்டில் மற்றொரு மண்டபமும் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும்.

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று வீர முழக்கம் இட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள் ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் என்கிற சிற்றூரில் மிகுந்த வசதி படைத்த ஜமீன் குடும்பத்தில், 1908ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ம் நாள் பிறந்தார்.

பள்ளிப்படிப்பினை மட்டுமே முடித்திருந்தாலும், அன்னிய நாட்டினால் அடிமைப்பட்டிருந்த அடித்தள மக்களின் அன்றாட வாழ்க்கையே போரட்டமாக இருந்ததைக் கண்ணுற்ற தேவர் பெருமகனார், அம்மக்களின் வாழ்வு மேம்பட தன்னையே அர்ப்பணித்தார்.




ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராட, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்திற்கு தமிழகத்தில் இருந்து பெரும் படையினைத் திரட்டி அனுப்பிய பெருமை தேவர் பெருமகனார் அவர்களையேச் சாரும்.

1920ம் ஆண்டு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அமலில் இருந்த மிகவும் கொடுமையான குற்றப்பரம்பரை என்கிற சட்டத்திற்கு எதிராக முதன் முதலில் போராடி அச்சட்டத்தினை அகற்றியவர் தேவர் பெருமகனார் ஆவார்.

1939ம் ஆண்டு ஜூன் 22, அகில இந்திய பார்வர்டு கட்சியை நிறுவி நேதாஜி சுபாஷ் சந்திர போஸூடன் இணைந்து செயல்படல், 1952ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக்கோட்டை பாராளுமன்ற தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி என பல்வேறு உச்சங்களைத் தொட்டவர் தேவர் பெருமகனார்.

'வங்கத்தில் நேதாஜி; தமிழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்' எனத் தலைவர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளை கொண்ட விடுதலை போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் தேவர் ஜெயந்தி விழாவாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் அக்டோபர் 30ம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில்மரியாதைசெலுத்தி வருகின்றனர்.

நினைவிடத்தின் முன் ஒரு சிறிய இடத்தில், குறுகிய நேரத்தில் அதிக கூட்டம் கூடுவதால் பொதுமக்கள் நீண்ட நேரம் திறந்த வெளியில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. வெயில் மற்றும் மழையில் இருந்து அவர்களைப் பாதுகாத்திடவும், கூட்ட நெரிசலை தடுப்பதற்கும் தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும்விழாவின்போதுநினைவிடத்தின் முன் தற்காலிக கொட்டகை / பந்தல் மற்றும் தடுப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்திட, ஒரு நிரந்தர மண்டபம் அமைத்து தர வலியுறுத்தி அரசுக்கு பொதுமக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை அளித்து வருகின்றனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் முகப்பில் பொதுமக்கள் பாதுகாப்பாக அஞ்சலி செலுத்தும் வகையில் 1 கோடியே 42 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மண்டபமும், மிக முக்கிய பிரமுகர்கள் மரியாதை செலுத்தும் பாதையில் 12 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மற்றொரு மண்டபமும், ஆக மொத்தம் 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காங்கயம் நகராட்சியில் 16 டன் குப்பைகள் அகற்றம்

காங்கயம், அக்.29

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட திருப்பூர்சாலை, கடைவீதி, சென்னிமலை சாலை, கோவை சாலை, முத்தூர்சாலை பிரிவு உள்பட நகரின் பல இடங்களில் ஆயுதபூஜை பொருட்கள் விற்க திடீர் சாலையோரக் கடைகள் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு சுமார் 75 கடைகளில் வாகனங்களில் கொண்டு வரப்பட்ட வாழைக் கன்றுகள், மாவிலைகள், பூக்கள், தேங்காய், இளநீர் போன்ற ஆயுத பூஜைக்கு தேவையான பொருட்கள் சாலையோரங்களில் குவிக்கப்பட்டு விற்கப்பட்டன.



இத்துடன் வாழைப்பழம், பொரி, சூடம், திருநீறு, சந்தனம் போன்ற பூஜைப் பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. யஇவற்றில் விற்பனையாகாமல் நின்று போன மாவிலைகள், வாழைக் கன்றுகளை அங்கேயே விட்டுச் சென்று விட்டனர். இத்துடன் கடைகளிலிருந்து ஏராளமான இதர குப்பைகளும் குவிந்து கிடந்தது. தவிர ஆயுத பூஜைக்காக கடைகள், வணிக வளாகங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை சுத்தம் செய்த போது கிடைத்த உபயோகமற்ற பொருட்கள் ஆங்காங்கே குவிந்தது. பூஜை முடிந்த பின் இன்னும் அதிகமாக குப்பைகள் குவிந்தது.

வழக்கமாக காங்கயம் நகரில் நாள்தோறும் சுமார் 10 டன் வரை குப்பைகள் அகற்றப்படும். ஆனால் ஆயுத பூஜையை முன்னிட்டு கூடுதலாக குப்பைகள் சேர்ந்தது. இதனால் 16 டன் குப்பைகள் அகற்றப்பட்டதாக நகராட்சி அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

மேலும் கோவை சாலை உள்ளிட்ட பகுதிகளில் இன்னும் அகற்றப்படாத குப்பைகளை உரிய நேரத்தில்அகற்றுமாறுகாங்கயம்நகராட்சி நிர்வாகத்துக்கு நகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# சந்திர கிரகணத்தை முன்னிட்டு சிவன்மலை முருகன் கோவிலில் நடை அடைப்பு

காங்கயம், அக். 29

சந்திர கிரகணத்தை முன்னிட்டு காங்கயம் அருகே சிவன்மலை முருகன் கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி முதல் நடை அடைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிவன்மலை முருகன் கோவில் தரப்பில் கூறியுள்ளதாவது:

சந்திர கிரகண நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை ஏற்படுவதை அடுத்து, திருப்பூர் மாவட்டம், காங்கயம்அருகே,சிவன்மலையில் உள்ள புகழ்பெற்ற சுப்பிரமணிய சுவாமி கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடை சாத்தப்பட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை வழக்கம்போல கோவில் திறக்கப்பட்டு வழிபாடு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காட்டுப்பாளையம் புதிய மின் பகிர்மானம் தொடக்கம் மின் கணக்கீடு செய்வதில் மாற்றம்

திருப்பூர், அக். 29

திருப்பூர் மின்சார வாரிய செயற்பொறியாளர் சு.ராமச்சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறி இருப்பதாவது:

திருப்பூர் மின்பகிர்மான வட்டம் திருப்பூர் கோட்டம் கிராமியம் உபகோட்டம் நல்லூர் பிரிவு அலுவலகத்தை சார்ந்த முத்தணம்பாளையம் (008) பகிர்மானத்திலிருந்து சுமார் 750 மின் இணைப்புகளை பிரித்து காட்டுப்பாளையம்




(010) என்ற புதிய பகிர்மானம் உருவாக்கி மின் இணைப்புகளுக்கு புதிய மின் இணைப்பு எண்கள் வழங்கப்பட்டு ஒற்றைப்படை மாதத்தில் கணக்கீடு செய்ய அடுத்த மாதம் முதல் மாற்றம் செய்யப்பட உள்ளது.

எனவே காட்டுப்பாளையம் பகுதியில் உள்ள யாசின்பாபு நகர், பூஞ்சோலை நகர், அபிராமிநகர், அங்காளம்மன் நகர் பகுதிகளில் உள்ள மின்நுகர்வோர் இனி வரும் காலங்களில் ஜனவரி, மார்ச், மே, ஜூலை, செப்டம்பர், நவம்பர் மாதங்களில் கணக்கீடு செய்யப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்ட நாளில் இருந்து 20 நாட்களில் மின் கட்டணம் செலுத்துமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இனி வரும் காலங்களில் மின்கட்டணம் உள்ளிட்ட அனைத்து சேவைகளுக்கும் புதிய மின் இணைப்பு எண்களை பயன்படுத்துமாறும் புதிய மின்கட்டண அட்டைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கார் மோதி விவசாயி பலி பதற வைக்கும் சி.சி.டி.வி., கேமரா காட்சிகள்



காங்கயம்:அக்.29

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகே உள்ள கீரனூர் பகுதியை சேர்ந்தவர்தங்கமுத்து (வயது 60). விவசாயியான இவர் நேற்று காங்கேயத்தில் மாட்டு தீவணம் வாங்கி கொண்டு ஸ்கூட்டியில் வீடு திரும்பினார்.அப்போது சிவன்மலை பகுதியில் சென்ற போது அதி வேகமாக வந்த கார் மோதியதில்உயிரிழந்தார்.

இந்நிலையில் விபத்து நிகழ்ந்தஇடத்தில்பொருத் தப்பட்ட சிசிடிவி., கேமராவில் விபத்து சம்பவம் பதிவாகி தற்போது காங்கேயம் பகுதி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

அதில் ஸ்கூட்டியில் செல்லும் விவசாயி மீது பின்னால் அதிவேகத்தில் வந்த கார் மோதுவதும், பின்னர் சுமார் 100 அடி தூரத்திற்கு விவசாயியை இழுத்து செல்லும் காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஜம்முகாஷ்மீரில் நடந்த கருத்தரங்கில் நொய்யல் ஆற்றை சிறப்பாக பராமரிக்கும் திருப்பூர் மாநகராட்சிக்கு பாராட்டு

திருப்பூர், அக். 29

ஜம்முகாஷ்மீர் தலைநகரம் ஸ்ரீநகர் மாநகராட்சியில் இந்திய அளவிலான மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிற ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் குறித்த பணிகள் மற்றும் ஆறுகளை பராமரிக்கும் பணிகள் குறித்த கலந்தாய்வுகூட்டம் நடந்தது.



இந்த கூட்டத்தில் திருப்பூரில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிற பணிகள் குறித்தும், நொய்யல் ஆறு பராமரிப்பு பணிகள் குறித்தும், அழகுபடுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார்மற்றும்கமிஷனர் பவன்குமார் கிரியப்பனவர் ஆகியோர் எடுத்துரைத்தனர். இதற்காக திருப்பூர் மாநகராட்சிக்கு அதிகாரிகள் குழுவினர் பாராட்டு தெரிவித்து, தங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இது குறித்து மாநகராட்சி மேயர் தினேஷ் குமார் கூறியதாவது:

திருப்பூரின் ஜீவநதியாக நொய்யல் ஆறு இருந்து வருகிறது.

கோவையில் இருந்து தொடங்கும் நொய்யல் ஆறு திருப்பூர், ஈரோடு வழியாக கரூர் உள்ளிட்ட மாவட்டங்களை கடந்து செல்கிறது. இந்த மாவட்டங்கள் அனைத்தும் தொழில்கள் நிறைந்த மாவட்டங்களாக இருந்து வருகிறது.

குறிப்பாக திருப்பூரில் பனியன் தொழில் பிரதான தொழிலாக இருப்பதால் நொய்யல் ஆற்றில் பனியன்நிறுவனகழிவுகள் மற்றும் சாயக்கழிவுகள் கலப்பதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இதுபோல் நொய்யல் ஆற்றை சீரமைக்கவும், தூர்வாரவும் செய்துள்ளோம். இந்த பணிகள் காரணமாக நொய்யல் ஆறு தற்போது சுத்தமாக உள்ளது.

மாநகராட்சி பகுதியில் 13 கிலோ மீட்டர் தொலைவிற்கு சீரமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.110 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக நொய்யல் ஆற்றின் இருபுறமும் கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு இடங்களில் பாலங்கள், சாலைகள் உள்ளிட்டவைகளும் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோல் திருப்பூரை விவரிக்கும் ஓவியங்களும் கரைகளில் வரையப்பட்டுள்ளன. நொய்யல் ஆறு பகுதியில் பார்க் அமைக்கும் பணிகளும் நடந்து வருகிறது.

தற்போது வரை 75 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. விரைவில் மீதமுள்ள 25 சதவீத பணிகளும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அப்போது திருப்பூர் நொய்யல் ஆறு புதுப்பொலிவுடனும், அழகாகவும் இருக்கும். ஜம்மு காஷ்மீரில் நடந்த கருத்தரங்கில் இது குறித்து தெரிவித்த போது பலரும் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

இது நமது திருப்பூர் மாநகராட்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும். திருப்பூர் மாநகராட்சி மற்ற மாநகராட்சிகளுக்கு முன் உதாரணமாகவும் விளங்கி வருகிறது. நொய்யல் ஆறு பராமரிப்பு மட்டுமின்றி பல பணிகளுக்கும் திருப்பூர் மாநகராட்சி அனைத்து மாநகராட்சிகளுக்கும் முன்னுதாரணமாக விளங்கி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# லிங்கம்பாளையத்தில் பனியன் நிறுவன ஊழியர் வீட்டில் கொள்ளை

அவிநாசி, அக். 29

அவிநாசி அருகேயுள்ள அவிநாசிலிங்கம்பாளையம் பெரியார் நகரை சேர்ந்தவர் நெல்லைராஜ் (வயது 58), பனியன் நிறுவன அலுவலர். இவர் குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்தார். பின்னர் வீடு திரும்பியுள்ளார். அப்போது, வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.உள்ளே சென்று பார்த்த போது பீரோவில் இருந்த 7 பவுன் தங்க நகைகள், ரூ.50 ஆயிரம்ரொக்கம்ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரியவந்தது. இது குறி த்து அவிநாசி காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், கை ரேகை, தடயவியல் நிபுணர்கள் அங்கு பதிவாகியிருந்த தடயங்களை சேகரித்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து அவிநாசி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# தனியார் மயமாக்கப்பட்ட தூய்மைப்பணி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்: திருமுருகன்பூண்டி நகராட்சி கவுன்சிலர்கள் வலியுறுத்தல்

அவிநாசி, அக். 29

அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சியில் 100க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தூய்மைப்பணி கடந்த சில மாதங்களுக்கு முன்பு தனியார் மயமாக்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் நடைபெற்று வருகிறது.




இந்நிலையில், திருமுருகன்பூண்டி நகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், அதிமுக., உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 18 நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி ஆணையர் பி. ஆண்டவனிடன் கோரிக்கை மனு அளித்தனர். அதில், கூறியிருப்பதாவது: 5 மாதங்களுக்கு முன்பு தனியார் மயமாக்கப்பட்ட தூய்மைப் பணியால், நகராட்சி முழுவதும் பொது சுகாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. மேலும், சாக்கடை கால்வாய் தூய்மை செய்யப்படாமல் புழு மற்றும் கொசு உற்பத்தியாகி சுகாதாரகேடு ஏற்பட்டு நோய்த் தொற்று பரவும் அபாயம் உள்ளது. தனியார் மயமாக்கப்பட்ட தூய்மைப் பணியால் செலவு தொகையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. மக்களின் வரிப்பணம் பெருமளவு தூய்மைப் பணிக்கு செலவாகிறது. பொது நிதியிலிருந்து புதிதாக தெரு விளக்குகூட அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.ஆகவே தனியார்மயமாக்கப்பட்ட தூய்மைப் பணி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனு அளிப்பின்போது, நகர்மன்றத்துணைத்தலைவர் ராஜேஸ்வரி, முன்னாள் பேரூராட்சித் தலைவர் லதா சேகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அவினாசி பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம்

அவினாசி, அக். 29

அவிநாசி நகரப் பகுதியில் சாலையோரங்களில் புதிய புதிய கடைகள் உருவாகி செயல்பட்டு வருகின்றன.

சாலையை ஆக்கிரமித்து கடைகள் நடத்துவதால் விபத்துகள் ஏற்படுவது மட்டுமின்றி, பாதசாரிகள், வாகன ஓட்டிகளும் அவதியடைந்து வருகின்றனர்.



இந்நிலையில், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காத வகையில் கடைகளை முறைப்படுத்த வேண்டும் என பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வியாபாரிகள் சங்கத்தினர் உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அவிநாசி பேரூராட்சி அலுவலகத்தில் செப்டம்பர் 22 ந் தேதி நடைபெற்றது. இதில், சாலையோரக் கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வாரச் சந்தை வளாகத்துக்கு மாற்றப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், அக்டோபர் 1ந் தேதி முதல் தீர்மானம் அமல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்து நேற்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும்வரை போராட்டம் தொடரும் என்று பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



அமைச்சர் சாமிநாதன் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் திருப்பூர் மாவட்டத்தின் குடிநீர்த்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

# ஜம்முகாஷ்மீரில் நடந்த கருத்தரங்கில் நொய்யல் ஆற்றை சிறப்பாக பராமரிக்கும் திருப்பூர் மாநகராட்சிக்கு பாராட்டு

திருப்பூர், அக். 29

திருப்பூர் மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர்கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது:




திருப்பூர் மாவட்டத்தின் இயல்பான வருடாந்திர மழை 618.20மி.மீஅளவு. அக்டோபர் 2023ம் மாதம் முடிய சராசரியாக பெய்ய வேண்டிய மழை அளவு 451.60மி.மீ.,நடப்பு2023ம் ஆண்டில் நாளது வரை பெய்த மழையின் அளவு 342.66 மி.மீ ஆகும். பயிர் சாகுபடிக்கு தேவையான நெல் மற்றும் பிற பயிறு வகை தானியங்கள் விதைகள் போதிய அளவு இருப்பில் உள்ளது.

அதன்படி நெல் 41.39 மெட்ரிக் டன், சிறுதானிய பயிறுகள் 15.25 மெட்ரிக் டன், பயிறுவகை பயிறுகள் 28.98 மெட்ரிக் டன் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகள் 1.770 மெட்ரிக் டன்இருப்பிலுள்ளது. நெல் சாகுபடிக்கு தேவையான யூரியா, பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளது. யூரியா1642மெட்ரிக்டன், டி.ஏ.பி. 1160மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 5,765 மெட்ரிக் டன் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 612 மெட்ரிக் டன்அளவு இருப்பில் உள்ளதென கலெக்டர் தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டத்தில் இருந்து பல்வேறு விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முந்தைய கூட்டரங்கில்விவசாயிகள் வழங்கிய மனுக்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து துறை வாரியாக கலெக்டர் மனுதாரர்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டதுடன் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளையும் காலதாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகளிடமிருந்து 144 கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், இணை இயக்குநர்(வேளாண்மை) மாரியப்பன், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) கிருஷ்ணவேணி, துணை ஆட்சியர்கள் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசா

# தென்னை வளர்ச்சி வாரியத்தில் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சி நிறைவு

உடுமலை, அக். 29

உடுமலை அடுத்த தளி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் தென்னை மகத்துவ மையம் உள்ளது.இந்த மையத்தில் தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை சார்பாக கடந்த 10ந் தேதி முதல் தொழிற்கல்வி சார்ந்த நேரடி உள்ளுறை பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் ஜல்லிபட்டி அரசு மேல்நிலைபள்ளியில் பிளஸ்2 வகுப்பில் வேளாண் அறிவியல் பிரிவில் படித்து வருகின்ற மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். பயிற்சியின் போது மாணவர்களுக்கு தென்னை உயர் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் தென்னை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் பற்றிய விவரங்கள் கற்பிக்கப்பட்டது. மேலும், செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது.

நிறைவு விழாவையொட்டி மையத்தில் தென்னை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது. அதுமட்டுமின்றி விவசாயிகளின் தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலையையும் பார்வையிட்டு மாணவர்கள் பல தொழில்நுட்பங்களை கற்றுக்கொண்டனர்.10 நாள் பயிற்சியின் நிறைவு விழா தளியில் அமைந்துள்ள தென்னை மகத்துவ மையத்தில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு மேலாளர் கு. ரகோத்துமன் தலைமை தாங்கினார்.ஜல்லிபட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பழனிச்சாமி வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவு செய்தமைக்கு மாணவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தார்.



பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சியாளர் ஹேமலதா தனது அனுபங்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார். முடிவில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் விவசாய ஆசிரியர் ரமேஷ் நன்றி கூறினார்.

# தாராபுரம் பகுதி ஓட்டல்களில் விலை பட்டியல் வைக்க கோரிக்கை

தாராபுரம், அக். 29

தாராபுரம் நகராட்சி கவுன்சிலருக்கான ஆய்வு கூட்டம் நகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு நகராட்சி தலைவர் கு.பாப்பு கண்ணன் தலைமை தாங்கினார். ஆணையர் எஸ். எம்.பாரிஜான், துணைத் தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மன்ற பொருளாக 89 தீர்மானங்கள் வைக்கப்பட்டது.



கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

துரைசந்திரசேகரன் (தி.மு.க.): எனது வார்டில் சி.எஸ்.ஐ.காம்பவுண்டில் சாக்கடை வசதி இல்லை.தண்ணீர்தேங்கி நிற்கிறது. நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தலைவர் பாப்பு கண்ணன்: நோட்டீஸ் அனுப்பலாம்.

நாகராஜ் (அ.தி.மு.க.): தாராபுரம் நகராட்சி பகுதி ஓட்டல்களில் விலை பட்டியல் வைப்பதில்லை. மேலும் பஸ் நிலையம் பகுதியில் சாப்பிட்ட பிறகு பில் கொடுப்பதில் தகராறு ஏற்படுகிறது.

தலைவர்: இது குறித்து தொழிலாளர் நலன் அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்படும்.

முருகானந்தம் (தி.மு.க.): பல லட்சம் மதிப்பில் தாராபுரம் ஹவுசிங் யூனிட்டில் அண்மையில் கட்டப்பட்ட பூங்காவில் செடி கொடிகள் முளைத்து சீர்கெட்டு உள்ளது.மேலும் எனது வார்டில் தெரு ஓரங்களில் மரம் முளைத்துள்ளதால் பள்ளி பஸ்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளது.

தலைவர்: நகராட்சி பூங்கா உடனடியாக சீரமைக்கப்படும் மரங்களைவெட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறுவிவாதம்நடைபெற்றது. கூட்டத்தில் 89 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அப்போது நகராட்சி தலைவர் கு.பாப்பு கண்ணன் கூறியதாவது:

திட்ட குழு நிதியிலிருந்து ஒரு கோடியே 52 லட்சம் மதிப்பில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும், பொது நிதியிலிருந்து ஒரு கோடியே 65 லட்சம்மதிப்பில்வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள ரூ.3.17 கோடிக்கு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கருணாநிதி உருவ சிலையை தாராபுரம் பழைய நகராட்சி பகுதியிலோஅல்லது பெரியார் உருவ சிலை அருகே வைப்பது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# திருப்பூர் வழியாக இயக்கப்படும் சென்னை—கோவை வந்தே பாரத் ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுமா? பயணிகள் எதிர்பார்ப்பு



திருப்பூர், அக். 29

இந்திய ரெயில்வே துறையை நவீனமயமாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே வந்தே பாரத் ரெயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு தொடக்கம் முதலே மக்கள் ஆதரவு அதிகமாக இருந்தது.

தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட முதல் வந்தே பாரத் என்றால் அது சென்னை பெங்களூர் மைசூர்வந்தேபாரத்தான். இருப்பினும் அதன் பெரும்பகுதி கர்நாடகாவில் தான் செல்கிறது. எனவே முழுக்க முழுக்க தமிழ்நாட்டில் இயக்கப்பட்ட முதல் வந்தே பாரத் என்றால் அது சென்னை கோவை வந்தே பாரத் தான். இதனை கடந்த ஏப்ரல் 8ந்தேதி பிரதமர்மோடி தொடங்கி வைத்தார்.

கடந்த 25ந் தேதியுடன் இந்த ரெயில் தொடங்கப்பட்டு 200 நாட்களை நிறைவடைகிறது.

இந்தியாவில் இயக்கப்படும் பல வந்தே பாரத் ரெயில்கள் காலியாகவும் பயணிகள் இல்லாமல் இயக்கப்படும் நிலையில், சென்னை கோவை வந்தே பாரத் ரெயில்கள் இந்த 199 நாட்களும் ஹவுஸ்புல்லாகவே இருந்துள்ளது.

இந்த ரெயிலை முதல் நாள்பிரதமர்மோடி நேரில் வந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது முதலே இந்த ரெயில் டிக்கெட்கள்வெயிடிங் லிஸ்டிலேயே இருந்துள்ளது.அதிலும்கோவை சென்னை மார்க்கத்தில் வந்தே பாரத் ரெயில்களின் டிக்கெட்டுகள் பல நாட்கள் முன்பாகவே விற்று தீர்ந்துவிடுகிறது. இதனால் கோவை சென்னை வந்தே பாரத்தில் பயணிக்க விரும்புவோர் முன்கூட்டியே நிச்சயம் புக் செய்தாக வேண்டும்.

சென்னை கோவை வந்தே பாரத்தில் 56 இருக்கைகளை கொண்ட முதல் வகுப்பு எக்ஸிகியூட்டிவ் க்ளாஸ் இருக்கைக்கான டிக்கெட் ரூ. 2,310ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல 450 சீட்களை கொண்ட வழக்கமான சேர் காருக்கு டிக்கெட் ரூ.1,215ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பொதுவாகவந்தேபாரத்தில் டிக்கெட் விலை சற்று அதிகமாக இருக்கிறது என்ற விமர்சனம் இருக்கும். ஆனால், இது சென்னை கோவை வந்தே பாரத் ரெயில்கள் முன்பதிவை குறைக்கவில்லை.

எப்போதும் இருக்கும் வெயிட்டிங் லிஸ்ட் டிக்கெட்கள் இதற்கு சாட்சியாகும். ஒரு சில வந்தே பாரத் ரெயில்களில் டிக்கெட் விற்பனை குறைவாக உள்ளதாக புகார் இருக்கும் நிலையில் சென்னை கோவை வந்தே பாரத் நல்ல வரவேற்புடன் புதிய சாதனை படைத்து வருகிறது.

முதலில் சென்னை கோவை வந்தே பாரத் 6 மணி நேரம் 10 நிமிடங்களில் செல்லும் என அறிவிக்கப்பட்டது. அதிவேகமாக ரெயில்கள் செல்லும் வகையில் டிராக் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட நிலையில் வந்தே பாரத் பயண நேரம் மேலும் 20 நிமிடங்கள் குறைக்கப்பட்டது. இப்போது சென்னை கோவை வந்தே பாரத் 5.50 மணி நேரத்தில் இலக்கை சென்றடைகிறது.

கோவையில் இருந்து காலை 6 மணிக்கு புறப்படும்வந்தேபாரத்திருப்பூர், ஈரோடு. சேலம் வழியாக 11.50க்கு சென்னை சென்றடையும். அதேபோல சென்னையில் இருந்து மதியம் 2.25 மணிக்குக் கிளம்பும் வந்தே பாரத் இரவு 8.15 மணிக்கு மீண்டும் கோவை வந்தடையும். இந்த ரெயில் திருப்பூர் மற்றும் சேலத்தில் இரண்டு நிமிடங்களும் ஈரோட்டில் 3 நிமிடங்களும் நிறுத்தப்படுகிறது.

சென்னை ஜோலார் பேட்டை இடையே மணிக்கு 130 கி.மீ வேகத்தில் செல்ல அனுமதித்ததும், அதைத் தொடர்ந்து அரக்கோணம் ஜோலார் பேட்டை பிரிவில் வேகத்தை அதிகரித்ததும் பயண நேரத்தை குறைக்க உதவி இருக்கிறது. சென்னை கோவை இடையே பகல் நேரத்தில் ஏற்கனவே இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் இயக்கப்படும் நிலையில், அதையும் தாண்டி வந்தே பாரத்திற்கு மக்கள் ஆதரவு அதிகமாக இருக்கிறது.

மேலும் நாட்டில் இயக்கப்படும் மற்ற வந்தே பாரத் ரெயில்களில் மொத்தம் 16 பெட்டிகள் இருக்கும். ஆனால், சென்னை கோவை ரூட்டில் 8 பெட்டிகள் மட்டும் இருக்கிறது. இந்த ரூட்டில் டிக்கெட் தேவை அதிகமாக இருப்பதால்கூடுதல் பெட்டிகளை இணைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருப்பினும் ஒரு ரூட்டில் 6 மாதங்கள் ரெயில் இயங்கிய பிறகே தேவையான மாற்றங்களை கொண்டு வர முடியும் என்பதால் தற்போதைய சூழலில் கூடுதல் பெட்டிகளை இணைக்க வாய்ப்பில்லை என கூறப்படுகிறது.

# அரசு பள்ளியில் பல் மருத்துவ முகாம்



வாலாஜாபாத், அக். 29

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடல் நலம் குறித்த பரிசோதனைகளை மேற்கொள்ள தமிழக அரசு அறிவுறுத்திஉள்ளது.அதன்படி வாலாஜாபாத் அறிஞர் அண்ணா அரசு மேல்நிலை பள்ளியில் பயிலும் 500 மாணவர்களுக்கு வாலாஜாபாத்தில் செயல்படும் அரிமா சங்கம் மற்றும் அஞ்சலாட்சி பல் ஆஸ்பத்திரி இணைந்து பல்பரிசோதனைமுகாமை நடத்தியது.

முகாமில் பல் மருத்துவ சிகிச்சை சிறப்பு டாக்டர் ஆச்சியப்பன் தலைமையில் பல் மருத்துவர்கள் கலந்துகொண்டு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு பற்களை பரிசோதனை செய்து தேவைப்படுபவர்களுக்கு மாத்திரைகள், பற்பசை போன்றவற்றை இலவசமாக வழங்கி சிகிச்சை அளித்தார்கள்.

நிகழ்ச்சியில் பள்ளியில் தலைமை ஆசிரியர் செல்வி மற்றும் ஆசிரியர்களும், அரிமா சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.5 ஆயிரம் நிதி உதவி: அமைச்சர் தகவல்



சென்னை, அக். 29

வாழ்வின் முதல் ஆயிரம் நாட்கள் என்ற சிறப்பு திட்டத்தின் கீழ் 5,694 பெண்களுக்கு ரூ.50 லட்சம் நிதி உதவியை மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

பின்னர் இந்த திட்டம் குறித்து அவர் கூறியதாவது:

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும்குழந்தைகள்நலன் காக்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

குழந்தைகளின் முதல் 1000 நாட்கள் உதவும் வகையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான நிதியுதவி திட்டம் தமிழ்நாட்டில் ராணிப்பேட்டை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இன்று 5294 கர்ப்பிணி தாய்மார்களுக்கு முதல் 3 தவணை வழங்கப்பட உள்ளது.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்குகின்ற ரூ.5000 நிதி உதவி உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் அடுத்த ஆயிரம் நாட்களில் தேவைப்படும் ஊட்டச்சத்தை பூர்த்தி செய்ய வழங்கப்படுகின்றது. தமிழ்நாடு அரசு தாய் சேய் நலன் காக்க இத்திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் மருத்துவ குறியீடுகள் கணக்கிடப்பட்டு 14 மாவட்டங்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு, ரத்தசோகை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் உள்ள 23 வட்டாரங்களில் உள்ள 118 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு வருடத்தில் 37 ஆயிரத்து200குழந்தைகள் பிறக்கின்றன. 2 வருடங்களுக்கு 74 ஆயிரத்து 400 குழந்தைகள். இக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் ஊட்டச்சத்திற்காக கர்ப்பம் தரித்தஉடன் முதல் தவணையாக 20, 28, 38வது வாரங்களில் ரூ.1000, 6வது மாதம் 4ம்தவணைரூ.500 24வது மாதம் 7வது தவணை ரூ.500 என மொத்தமாக கர்ப்ப காலத்தில் ரூ.3000, 2 வயது வரை குழந்தை வளரும் பருவத்தில் ரூ.2000 என மொத்தம் ரூ.5000 இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தை இறப்பு விகிதத்தில் இந்தியாவில் ஆயிரத்திற்கு 28, தமிழ்நாடு அளவில் ஆயிரத்திற்கு 13, மகப்பேறு இறப்பு விகிதம் இந்திய அளவில் ஒரு லட்சத்திற்கு 97, தமிழ்நாடு அளவில் ஒரு லட்சத்திற்கு 54 என்ற விகிதத்தில் உள்ளது. இதனை மேலும் குறைத்திடும் வகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இத்திட்டத்தினை கொண்டு வந்துள்ளார். இதற்காக ரூ.38.20 கோடி ஒதுக்கியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் கர்ப்ப கால ரத்த சோகை தடுக்கப்படும். அதே போன்று பேறுகால குழந்தைகள் எடை சீரானதாக இருக்கும். 2 வருடத்திற்கான குழந்தை வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படும். அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி கிடைப்பது உறுதி செய்யப்படும். எடை குறைவான குழந்தைகள் பிறப்பதை முற்றிலுமாக தவிர்த்திட முடியும். கர்ப்ப கால பிரச்சினைகளை மேம்படுத்திட முடியும். அனைத்து தாய் சேய் நல குறியீடுகளை மேம்படுத்துதல், பிரச்சினைகள் உள்ள கர்ப்பிணி தாய்மார்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களை காத்திட முடியும். கர்ப்பிணிதாய்மார்களுக்கு வழங்கும் இந்த நிதியுதவிக்கான பணத்தினை கட்டாயம் தாய்மார்களின் ஊட்டச்சத்தையும் குழந்தைகளின் ஊட்டச்சத்தையும் மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள தாய்மார்களை தமிழ்நாடு முழுவதிலும் கண்டறிந்து அவர்களுக்கான சிறப்பு திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது.

இதுவரை 8,163 தாய்மார்கள்இத்திட்டம்மூலம் பயன்அடைந்துள்ளனர். இன்று 5,294 தாய்மார்களுக்கு ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக ரூ.1000க்கான நிதி உதிவி வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாம்


உடுமலை, அக். 29

உடுமலையை அடுத்துள்ள குடிமங்கலத்தில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி குடிமங்கலம் வட்டார வளமையத்தின் சார்பில் உடுமலை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் 86 பேர் கலந்து கொண்டனர்.

இதில் உதவி உபகரணங்கள் ஒருவருக்கும், புதிய தேசிய அடையாள அட்டை 30 பேருக்கும், இலவச பேருந்து பயண அட்டைகள், ரெயில் பயண அட்டைகள் 48 பேருக்கும் வழங்கப்பட்டன.

மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் பாலசுந்தரி, வட்டார கல்வி அலுவலர் சரவணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் வசந்த் ராம்குமார், வட்டார வளமைய மேற்பார்வையாளர் சுமதி, வட்டார ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணி, ஆசிரிய பயிற்றுநர்கள், குடிமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

# ஒரு வயது பெண் குழந்தையை தெரு நாய் கடித்து குதறியது



திருவொற்றியூர்: அக்.29

திருவொற்றியூர் பெரியார் நகர் விவேகானந்தர் தெருவில் தேவி என்ற பெண் தன்னுடைய ஒன்றரை வயது குழந்தையை தூக்கி கொண்டு வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த தெரு நாய் ஒன்று திடீரென குழந்தை மீது பாய்ந்து குழந்தையின் முகத்தில் கடித்து குதறி உள்ளது.

நாயிடமிருந்து குழந்தையை காப்பாற்ற வந்த தாத்தாவையும் நாய் கடித்துள்ளது.

அது மட்டுமில்லாமல் அதே பகுதியில் நான்கு பேரை அந்த நாய் கடித்துள்ளதாக அந்த பகுதி மக்கள் கூறுகின்றனர்.

காயமடைந்த குழந்தையை அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த பகுதியில் ரெட்டமலை சீனிவாசன் தெரு, ஒத்தவாடை தெரு உள்ளிட்ட இடங்களில் 50க்கும் மேற்பட்ட தெரு நாய்கள் உள்ளதாகவும் அந்த தெரு நாய்கள் கடித்து விடும் என்ற அச்சத்துடனே அந்த பகுதி மக்கள் வாழ்ந்து வருவதாகவும் மாநகராட்சிக்கு புகார் அளித்தால் ஊழியர்கள் வந்து நாயை பிடித்து சென்று திரும்பவும் அந்த பகுதியிலேயே விட்டு விடுவதாகவும் தெருவில் சுற்றித் திரியும் நாய்களை மாநகராட்சி ஊழியர்கள் பிடித்து செல்ல வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருப்பூர்—பல்லடம் வழித்தடத்தில் கூடுதல் அரசு பேருந்துகள் இயக்க வேண்டும்: கல்லூரி மாணவிகள் கோரிக்கை




திருப்பூர், அக். 29

திருப்பூரில் இருந்து பல்லடம் செல்லும் சாலையில் உள்ள எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் சுற்றுப் பகுதியை சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்த கல்லூரியானது காலை 9 மணி முதல் பிற்பகல் 1.55 மணி வரையில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து காலை 8 மணி முதல் 9 மணி வரை பல்லடம் வழித்தடத்தில் போதுமான அளவில் அரசு பேருந்துகள் இயக்கப்படுவதில்லை என தெரிகிறது. இதனால் இலவச பயணத்தை நம்பியுள்ள மாணவிகள் வேறு வழியின்றி தனியார் பேருந்துகளில் கட்டணம் செலுத்தி கல்லூரிக்கு செல்கின்றனர்.

இது குறித்து எல்.ஆர்.ஜி., கல்லூரி மாணவிகள் கூறியதாவது:

அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் கல்விக்காக ஏராளமான திட்டங்களை அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் மாணவிகள் பயன்பெறும் வகையில், அரசு பேருந்துகளில் இலவச பயணத்திட்டம், அனைத்துதரப்பு மக்களிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்நிலையில் திருப்பூர்பல்லடம் வழித்தடத்தில் காலை வேளைகளில் போதிய அளவு அரசு பேருந்துகள் இல்லாததால் தனியார் பேருந்துகளில் கட்டணம் செலுத்தி கல்லூரிக்கு செல்ல வேண்டியுள்ளது. இதற்காகவே மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திருப்பூர்பல்லடம் வழித்தடத்தில் கூடுதல் அரசு பேருந்துகளை இயக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# சம்பா பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்: அன்புமணி அறிக்கை

சென்னை, அக். 29

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் குறுவை பருவத்தில் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் கருகியும், ஒன்றரை லட்சம் ஏக்கர் பரப்பளவில் விளைச்சல் குறைந்தும் உழவர்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக சம்பா மற்றும் தாளடி பருவ சாகுபடிகளையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

காவிரி பாசன மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும்.

உழவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட ஏக்கருக்கு ரூ.25,000 வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். அதேபோல், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ஒருமுறை உதவியாக ரூ.25,000 இழப்பீடு வழங்குவதுடன், ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலைவழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கையை 150 ஆக அதிகரிக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வாழை சாகுபடியில் எந்திரம் மூலம் களை மேலாண்மை பணி



முத்தூர், அக். 29

முத்தூர்,சின்னமுத்தூர், ஊடையம் வேலம்பாளையம், மங்களப்பட்டி, பூமாண்டன்வலசு, ராசாத்தாவலசு, வள்ளியரச்சல் வருவாய் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் ஆண்டு முழுவதும் விவசாயம் சார்ந்த தொழில்கள் மிகவும் பிரதான தொழில்களாக செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ள ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து கால்வாய்வழியாககீழ்பவானி பாசன பகுதிகளுக்கு ஆண்டுதோறும் இரு பிரிவுகளாக திறந்துவிடப்படும் தண்ணீரை பயன்படுத்தி நஞ்சை சம்பா நெல் மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள், காய்கறி பயிர்கள் சாகுபடி நடைபெற்று வருகிறது.

இதன்படி இப்பகுதிகளில் 10 மாதங்களில் நன்கு வளர்ந்து கூடுதல் பலன் அளிக்கும் வாழை சாகுபடி கடந்த ஜூலை மாதம் முதல் தொடங்கப்பட்டது.

இதன்படி இப்பகுதி விவசாயிகள் வாழை சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ.80 ஆயிரம் முதல் ரூ. 1 லட்சம் வரை முதலீடு செய்து உள்ளனர்.

இதன்படி வாழை சாகுபடியில் களை மேலாண்மைக்குபுதியமுயற்சியாக எந்திரம் மூலம் களை எடுக்கும் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

இதன்படி மோட்டார் என்ஜின் மூலம் இயங்கும் களை எந்திரம் வாழை சாகுபடியில் வேர்ப்பகுதி, நடுப்பகுதி, இலை பகுதிகளில் எந்த சேதமும் விளைவிக்காமல் முற்றிலும் வளர்ந்துள்ள புல், செடி களைகளை அகற்றி வயலில் உள்ள மண்களில் மேலே தோண்டி கொண்டு வந்து அதே வாழை கன்றுகளை சுற்றிலும் மண்களால் சமன் செய்து விடுகின்றன.

இதன்படி இப்பகுதிகளில் வாழை சாகுபடி மேலாண்மையில் களை எடுக்கும் பணிக்கு எந்திரம் பயன்படுத்தப்படுவது வாழை சாகுபடி விவசாயிகளின் நேரம் மேலாண்மையும்,பொருளாதாரம் மேலாண்மையும், கூலியாட்கள் பற்றாக்குறையும் நிறைவு செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இனிப்பு, காரங்கள் தயாரித்து விற்கும் கடைகளுக்கு முக்கிய அறிவிப்பு

தர்மபுரி, அக். 29

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பேக்கரி மற்றும் ஓட்டல்களில்இனிப்பு, கார வகைகள் தயாரித்து விற்கும் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்களுக்கு தருமபுரி மாவட்ட நிர்வாகம் வழிகாட்டு நெறிமுறைகளை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து தருமபுரி மாவட்ட கலெக்டர்சாந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது;

இனிப்பு, காரவகைகள் தயாரிக்க, தரமான மூலப்பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சுகாதாரமான முறையில் தயாரிக்க வேண்டும். கலப்பட பொருட்கள்பயன்படுத்தக்கூடாது. இனிப்பு வகைகளுக்கு அனுமதிக்கப்பட்ட அளவை காட்டிலும்கூடுதலாக நிறமி சேர்க்கக் கூடாது.

ஒரு முறை பயன்படுத்திய சமையல் எண்ணெயை மறுபடியும் சூடுபடுத்தி, உணவுதயாரிக்க பயன்படுத்தக் கூடாது.

தடை செய்யப்பட்ட, ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்படுத்தினால் ரூ.2000 அபராதம் விதிக்கப்படும். சூடான உணவு பொருட்களை பிளாஸ்டிக் பேப்பர், கவரில் பொட்டலமிடக் கூடாது மீறினால் அபராதம் விதிக்கப்படும். பண்டிகை முன்னிட்டு இனிப்பு, கார வகைகளுக்கு சீட்டு நடத்துவோர் உட்பட அனைத்துதயாரிப்பாளர்கள்மற்றும்விற்பனையாளர்கள், உணவு பாதுகாப்பு துறையில் பதிவு செய்து உரிமம் பெற வேண்டும்.

ஏற்கனவே உரிமம் பெற்றி ருந்தால் புதுப்பித்திருக்க வேண்டும். உரிமம் இல்லாமல் தயாரிப்பது கண்டறியப்பட்டால், வணிகர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.


சமுதாய கூடங்கள், கல்யாண மண்டபங்கள் மற்றும் இதர இடங்களில் இனிப்பு, கார வகைகளை தயாரிப்பவர்கள் அதற்கான உரிமம் பெறவேண்டும்.

உணவுப் பொருள் தயாரிக்கும்பணியில் ஈடுபடுவோர் கண்டிப்பாக பயிற்சி, மருத்துவ சான்று பெற்றிருக்க வேண்டும்.

பேக்கிங் செய்யப்பட்ட உணவு பொருட்களுக்கான விபரச்சீட்டில் தயா ரிப்பாளர் முழு முகவரி, உணவு பொருள் பெயர், தயாரிப்பு அல்லது பேக்கிங் செய்த தேதி, காலாவதியாகும்நாள், சைவ, அசைவ குறியீடு அவசியம் குறிப்பிட வேண்டும். பால் பொருட்களால் தயாரிக்கும் இனிப்பு வகைகளை, மற்ற இனிப்புகளுடன் கலந்துவைத்திருக்கக் கூடாது. இவற்றை எத்தனை நாட்களுக்குள் உபயோகிக்க வேண்டும் என்பதை லேபிளில் அச்சிட வேண்டும். உணவு பொருட்கள் தொடர்பான புகார்கள் இருப்பின் 9444042322 என்ற வாட்ஸ் ஆப் எண்ணுக்கு தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 29.10.2023

# 'இந்தியன் 2' படத்தின் முக்கிய அறிவிப்பு நாளை வெளியாகும் படக்குழு அறிவிப்பு...!




1996ல் கமல்ஹாசன் நடிப்பில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற படம், 'இந்தியன்'. இந்த படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகி வருகிறது. இயக்குனர் ஷங்கர் படத்தை இயக்குகிறார். சமுத்திரகனி, சித்தார்த், பாபிசிம்ஹா, காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங் மற்றும் பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் நடிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

லைகா, ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரிக்கும் இந்தப் படத்தின் முக்கியமான காட்சிகள் தைவானின் தைபே, தென்ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் உள்ளிட்ட நகரங்களில் படமாக்கப்பட்டுள்ளன. மேலும் சென்னையில் செட் அமைத்து படப்பிடிப்பு நடத்தப்பட்டது. இதனிடையே இந்த படத்திற்கான டப்பிங், எடிட்டிங் உள்ளிட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் 'இந்தியன் 2' படத்தின் முக்கிய அறிவிப்பு நாளை காலை 11 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# நேரு உள்விளையாட்டு அரங்கில் லியோ படத்தின் வெற்றி விழா..! விஜய் ரசிகர்கள் மகிழ்ச்சி



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். இந்த படத்தில் அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.பல்வேறு சர்ச்சைகளுக்கு பின்னர் லியோ படம் கடந்த வாரம் வெளியானது.

லியோ திரைப்படம் முதல் வாரத்தில் உலக அளவில் ரூ.461 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு தெரிவித்தது. மேலும், தமிழ் சினிமாவரலாற்றில், முதல் வாரத்தில் அதிக வசூல் செய்து லியோ திரைப்படம் சாதனை படைத்துள்ளதாகவும் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது

இந்நிலையில், இப்படத்தின் வெற்றி விழா குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் வெற்றி விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நவம்பர் 1ஆம் தேதி நடைபெறவுள்ளது. விஜய் கலந்து கொள்ளும் இந்த விழாவுக்கு பாதுகாப்பு கோரி காவல்துறைக்கு படத் தயாரிப்பாளர் கடிதம் கொடுத்துள்ளார்

# நடிகை ரேகா நடித்துள்ள திரைப்படம் 'மிரியம்மா'



அறிமுக இயக்குனர் மாலதி நாராயண் இயக்கத்தில் தயாராகியுள்ள முதல் திரைப்படம் 'மிரியம்மா'. இதில் மூத்த நடிகை ரேகா கதையின் நாயகியாக நடித்துள்ளார். இவருடன் எழில் துரை, சினேகா குமார், அனிதா சம்பத், விஜே ஆஷிக், மாலதி நாராயண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜேசன் வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்ய, இந்த திரைப்படத்தில் இடம் பெறும் பாடல்களுக்கு ஏ. ஆர். ரெஹைனா இசையமைத்துள்ளார். படத்தொகுப்பு பணிகளை கமல் கவனிக்க, கலை இயக்க பணிகளை 'யாத்திசை' புகழ் ரஞ்சித் மேற்கொண்டுள்ளார். பெண்மணிகளை மையப்படுத்தி தயாராகும் இந்த திரைப்படத்தை 72 ஃபிலிம்ஸ் எனும் பட நிறுவனம் சார்பில் இயக்குனரான மாலதி நாராயண் தயாரித்துள்ளார்.

இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் நடிகை ரேகா பேசியதாவது, ஒரு படத்தில் நாம் நடித்த கதாபாத்திரத்தின் பெயரைச் சொல்லி நம்மை யாராவது அழைக்கும் போது மிகவும் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கும். தமிழில் ஜெனிபர் டீச்சர், ரஞ்சனி, உமா போன்ற கதாபாத்திரங்கள் எனக்கு அப்படி அமைந்தது. அது போல் மலையாளத்தில் ராணி, மீனுக்குட்டி போன்ற கதாபாத்திரங்கள் பேர் சொல்வது போல் அமைந்தது. அந்த வரிசையில் கண்டிப்பாக இந்த மிரியம்மாவும் இடம்பெறும் என்று நம்புகிறேன்.

செல்போனில் இயக்குனர் கதை சொல்லும் போதே என் மனதில் பட்டாம்பூச்சி பறக்கத் துவங்கிவிட்டது. இந்த கதாபாத்திரத்தில் ஏதோவொன்று இருக்கிறது, விட்டுவிடாதே என்று என் மனம் குதூகலித்தது. இந்தப் படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளித்த இயக்குனருக்கு என் நன்றிகள். இப்படத்தில் நான் எழிலுக்கு தாயாக நடித்திருக்கிறேன். எங்களுக்குள் அந்த பாண்டிங் வந்தால் தான் காட்சிகள் இயல்பாகத் தெரியும். ஆனால் நான் பல படங்களில் நடித்த சீனியர் என்பதால் எழில் ஆரம்பத்தில் விலகியே இருந்தான்.. பின்னர் நான் அவனை "டேய் இங்க வாடா" என்று உரிமையாக அழைத்துப்பேசத்துவங்கியதும்எழில்இயல்பாகிவிட்டான்.காட்சிகளும்அருமையாக வந்திருக்கின்றது.நான்நடித்தசிலகதாபாத்திரங்கள்சற்றுதிமிர்பிடித்தகதாபாத்திரங்கள் என்பதால் என்னைப் பார்ப்பதற்கு அப்படித் தெரியும். ஆனால் நான் உண்மையில் அப்படி இல்லை.

என்னைப் போன்ற நடிகைகளுக்கு இப்பொழுது பணம் ஒரு பொருட்டல்ல, நாங்கள் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து எங்களை நிரூபிக்க விரும்புகிறோம். நாற்பது வயது ஆகிவிட்டாலே கறிவேப்பிலையை தூக்கி எறிவது போல் எங்களை எறிந்துவிடுகிறார்கள். கமர்சியல் திரைப்படங்களால் கதாநாயகிக்கான முக்கியத்துவம் போய்விட்டது.எல்லோரும்என்னைஃபாரினில்சென்றுசெட்டில்ஆகிவிட்டீர்களா..? என்றுகேட்கிறார்கள்.நான்எப்பொழுதுமேசென்னையில்இருக்கவேவிரும்புகிறேன்.. நிறைய திரைப்படங்களில் நடிக்க விரும்புகிறேன்... உயிருள்ள வரை நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது என் ஆசை. சின்ன பட்ஜெட்டில் தொடங்கிய இப்படம் முடியும் போது பெரிய பட்ஜெட் திரைப்படமாக மாறிவிட்டது. இப்படத்திற்கு நீங்கள் ஆதரவு தந்து படத்தை வெற்றிப்படமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார்.

# பெண் நிருபர் விவகாரம்; தந்தையை போல் மன்னிப்பு கோருகிறேன்—நடிகர் சுரேஷ் கோபி



கேரளாவில் பிரபல நடிகர் மற்றும் பா.ஜ.க. முன்னாள் எம்.பி.யான சுரேஷ் கோபி கோழிக்கோட்டில் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டார். அப்போது அவரிடம் பெண் நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு கோபி பதிலளிக்கும்போது, மகளே (மோலே) என கூறி நிருபரின் தோள் மீது கை வைத்துள்ளார். இதுபற்றிய வீடியோ ஒன்றும் வெளிவந்தது.

அவரது இந்த செயலால், அந்த பெண் நிருபர் பின்னால் நகர்ந்து சென்றார். இதன்பின், 2வது கேள்வியை அந்த பெண் நிருபர் கேட்டுள்ளார். அப்போதும், அவருடைய தோள் மீது தன்னுடைய கையை கோபி வைத்திருக்கிறார். இந்த முறை அவருடைய கையை பெண் நிருபர் தள்ளி விடும் காட்சிகள் காணப்படுகின்றன.

இந்த வீடியோ வைரலானதும் பரபரப்பானது. இந்நிலையில், நடிகர் சுரேஷ் கோபி சமூக ஊடகம் வழியே வெளியிட்ட பதிவில், நட்பு ரீதியிலேயே அந்த பெண் நிருபரிடம் நடந்து கொண்டேன். அவர் அதனை தவறாக எண்ணினார் என்றால், அவருடைய உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும்.

அவர் இதனை மோசம் என உணருவார் என்றால், அவரிடம் இதற்காக மன்னிப்பு கோருகிறேன். வருந்துகிறேன்... என பதிவிட்டு உள்ளார். தொடர்ந்து கோபி, அந்த பெண் நிருபர் எனது வழியை பல முறை தடுத்ததும், அவரை ஒரு பக்கம் நகர்த்த முயன்றேன். நான் ஒரு தந்தை. அவரிடம் ஒரு தந்தையை போன்று மன்னிப்பு கோர தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்து உள்ளார்.

எனினும், பெண் நிருபர் கூறும்போது, அவர் கேட்டுள்ள மன்னிப்பு, மன்னிப்பு கேட்பதற்கு பதிலாக விளக்கம் அளிப்பது போன்று உள்ளது. அவருக்கு எதிராக சட்ட ரீதியாக அணுக உள்ளேன் என்று கூறியிருக்கிறார்.

கேரள பத்திரிகையாளர்கள் அமைப்பின் மாநில தலைவர் வினீதா மற்றும் பொது செயலாளர் கிரண் பாபு ஆகியோர், தவறை ஒப்பு கொண்டு சுரேஷ் கோபி மன்னிப்பு கேட்க வேண்டும் என அதுபற்றி வெளியிட்ட ஊடக செய்தியில் தெரிவித்து உள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

அவருக்கு எதிராக வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்படும் என தெரிவித்தது. பத்திரிகை தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து பெண்களுக்கும் ஏற்பட்ட அவமதிப்பு இது என்றும் பிற சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.இந்தவிவகாரம்பற்றிகோழிக்கோடுநகரஆணையாளரிடம் புகார் ஒன்றையும் அந்த பெண் நிருபர் அளித்துள்ளார்.

# ஹரிஷ் கல்யாண் நடிக்கும் 'பார்க்கிங்' படத்தின் முதல் பாடல் வெளியானது




பொறியாளன், வில் அம்பு, பியார் பிரேமா காதல், தாராள பிரபு உள்ளிட்ட பல படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் ஹரிஷ் கல்யாண். இவர் தற்போது ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கும் 'பார்க்கிங்'படத்தில்நடிக்கிறார்.திரில்லர்ட்ராமாவான 'பார்க்கிங்' திரைப்படத்தை 'பலூன்' பட இயக்குனர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ் ஃபேக்டரி சார்பில் தயாரிக்கிறார். மேலும் பேஷன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கிறது.

இந்த படத்தின் கதாநாயகியாக இந்துஜா நடிக்கிறார். மேலும் எம்.எஸ்.பாஸ்கர், ராம ராஜேந்திரன், பிரார்த்தனா நாதன், இளவரசு உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். இந்த படத்துக்கு சாம் சிஎஸ் இசையமைத்துள்ளார். ஜிஜு சன்னி ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்த படத்தின் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில், இந்த படத்தின் முதல் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி 'செல்லக்கள்ளியே' என்ற பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது. சாம் சிஎஸ் எழுதியுள்ள இந்த பாடலை கபில் கபிலன் பாடியுள்ளார். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# விக்ரம் நடிக்கும் 62வது படத்தின் அறிவிப்பு வீடியோ



நடிகர் விக்ரம் தற்போது இயக்குனர் பா.ரஞ்சித் இயக்கத்தில் 'தங்கலான்' திரைப்படத்தில் நடித்து வருகிறார். ஞானவேல் ராஜா தயாரிக்கும் இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி 26ந்தேதி 'தங்கலான்' திரைப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில் டீசர் நவம்பர் 1ந்தேதி வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக கவுதம் மேனன் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள 'துருவ நட்சத்திரம்' திரைப்படம் நவம்பர் 24ந்தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் விக்ரம் நடிக்கும் 62வது படத்தின் அறிவிப்பு வீடியோ தற்போது வெளியாகி உள்ளது. இந்த படத்துக்கு 'சியான் 62' என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தை 'பண்ணையாரும் பத்மினியும்', 'சேதுபதி', 'சிந்துபாத்', 'சித்தா' உள்ளிட்ட படங்களை இயக்கிய அருண்குமார் இயக்குகிறார்.ரியாஷிபுதயாரிக்கும்இந்தபடத்துக்குஜி.வி.பிரகாஷ்இசையமைக்கிறார். இந்த அறிவிப்பு வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கார்த்தி நடித்துள்ள ஜப்பான் படத்தின் டிரைலர் வெளியானது

இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்பறிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்களில் நடித்த அனு இமானுவேல் நடித்துள்ளார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தின் டீசர் மற்றும் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. 'ஜப்பான்'திரைப்படம்தீபாவளியன்றுதிரையரங்குகளில்வெளியாகவுள்ளநிலையில், இப்படத்தின் போஸ்ட் புரொடக்சன் பணிகளில் படக்குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி உள்ளது. இந்த டிரைலர் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 'வெளியேற்றப்படுவேன் என்று நினைக்கவில்லை' பிக்பாஸ் விஜய் வர்மா



நடிகை ரேகா நடித்துள்ள 'மிரியம்மா' படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழாவில் விஜய் வர்மா கலந்துகொண்டார்.

அறிமுக இயக்குனர் மாலதி நாராயண் இயக்கத்தில் தயாராகியுள்ள முதல் திரைப்படம் 'மிரியம்மா'. இதில் மூத்த நடிகை ரேகா கதையின் நாயகியாக நடித்துள்ளார். இவருடன் எழில் துரை, சினேகா குமார், அனிதா சம்பத், விஜே ஆஷிக், மாலதி நாராயண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜேசன் வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்ய, இந்த திரைப்படத்தில் இடம் பெறும் பாடல்களுக்கு ஏ. ஆர். ரெஹைனா இசையமைத்துள்ளார். படத்தொகுப்பு பணிகளை கமல் கவனிக்க, கலை இயக்க பணிகளை 'யாத்திசை' புகழ் ரஞ்சித் மேற்கொண்டுள்ளார். பெண்மணிகளை மையப்படுத்தி தயாராகும் இந்த திரைப்படத்தை 72 ஃபிலிம்ஸ் எனும் பட நிறுவனம் சார்பில் இயக்குனரான மாலதி நாராயண் தயாரித்துள்ளார்.

இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் தற்போதைய பிக்பாஸ் சீசனில் இருந்து சமீபத்தில் வெளியேற்றப்பட்ட விஜய் வர்மா பேசியதாவது, நட்பின் அடிப்படையில் தான் இந்த நிகழ்வில் வந்து கலந்து கொண்டேன். நான் வெளியேற்றப்படுவேன் என்று நினைக்கவில்லை. மக்கள் தரும் ஆதரவைப் பார்க்கும் போது வியப்பாகவும் சந்தோசமாகவும் இருக்கிறது. மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்து உள்ளே சென்றால் இன்னும் சிறப்பாக விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன் என்று பேசினார்.

# பெண்கள் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி: தாய்லாந்தை வீழ்த்திய இந்தியா




பெண்களுக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் உள்ள ஜெய்பால் சிங் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. ஆக்கி போட்டிகள் வரும் நவம்பர் 5ந் தேதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் ஜப்பான், 3 முறை சாம்பியனான தென்கொரியா, முன்னாள் சாம்பியனான இந்தியா மற்றும் சீனா, மலேசியா, தாய்லாந்து ஆகிய 6 அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இந்நிலையில் முன்னாள் சாம்பியனான இந்திய அணி தனது முதலாவது ஆட்டத்தில் 71 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தை தோற்கடித்து போட்டியை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இந்திய அணியின் சார்பில் சங்கீதா குமாரி 3 கோலும், மோனிகா, சலிமா டெடி, தீபிகா, லால்ரெம்சியாமி தலா ஒரு கோலும் அடித்தனர்.

முன்னதாக மாலை 4 மணிக்கு நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் ஜப்பான் அணி 30 என்ற கோல் கணக்கில் மலேசியாவையும், மாலை 6.15 மணிக்கு நடந்த மற்றொரு லீக் ஆட்டத்தில் 3 முறை சாம்பியனான தென்கொரியா அணி 10 என்ற கோல் கணக்கில் சீனாவையும் வீழ்த்தின. லீக் ஆட்டங்களில் ஜப்பான்தென்கொரியா (மாலை 4 மணி), தாய்லாந்து சீனா (மாலை 6.15 மணி), இந்தியாமலேசியா (இரவு 8.30 மணி) அணிகள் மோத உள்ளன.

# உலகக்கோப்பை கிரிக்கெட்: வங்காளதேச அணியை வீழ்த்தி நெதர்லாந்து அபார வெற்றி




50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து வங்காளதேசம் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற நெதர்லாந்து அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி, அந்த அணி முதலில் பேட்டிங் செய்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய விக்ரம்ஜித் சிங் 3 ரன்னிலும், ஓ டவுட் ரன் ஏதும் எடுக்காமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்துவந்த பாரேசி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி 41 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஒருபுறம் கேப்டன் எட்வர்ட்ஸ் நிலைத்துநின்று விளையாடினாலும், மறுபுறம் விக்கெட்டுகள் விழுந்துகொண்டே இருந்தது. அக்கர்மேன் 15 ரன்னிலும், டி லீட் 17 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திவந்த கேப்டன் எட்வர்ட்ஸ் அரைசதம் கடந்தார். அவர் 68 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் நெதர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 229 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. வங்காளதேச அணி தரப்பில் சொரிபுல் இஸ்லாம், தஸ்கின் அகமது, முஸ்தாபிசுர் ரகுமான், மெஹதி ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதையடுத்து, 230 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் களமிறங்கியது. நெதர்லாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் வங்காளதேச அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது . இதில், அதிகபட்சமாக வங்காளதேச அணியின் ஹசான் மிராஸ் 35 ரன்களும், மஹ்முதுள்ளா 20 ரன்களும், மஹெடி ஹாசன் 17 ரன்களும், தன்சித் ஹாசன் 15 ரன்களும், எடுத்து ஆட்டமிழந்தனர். நஜ்முல், ஷாகிப் அல் ஹாசன், முஷ்பிகர் ரஹிம், லிட்டன் தாஸ் ஆகியோர் ஒற்றை இலக்கில் ரன்கள் எடுத்து அவுட்டாகினர். இந்நிலையில், வங்காளதேச அணி 42.2 ஓவரில் 10 விக்கெட் இழப்பிற்கு 142 ரன்கள் எடுத்து தோல்வியை சந்தித்தது. இதனால் நெதர்லாந்து அணி 87ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது



# மும்பையில் இன்று நடைபெற்ற போட்டியில் மும்பை சிட்டி–ஐதராபாத் அணிகள் மோதின

12 அணிகள் இடையிலான 10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் மும்பையில் இன்று நடைபெற்ற போட்டியில் மும்பை சிட்டிஐதராபாத் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் மும்பை சிட்டி அணி சார்பில் மனோஜ் முகமது ஆட்டத்தின் 76வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஐதராபாத் அணி சார்பில் ஜோஸ் லூயிஸ் ஆட்டத்தின் 90+6வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் மும்பை சிட்டி ஐதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.